பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 02 2026 6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவீதமாக குறைத்துள்ளது.

2. இரண்டு மிகப்பெரிய பொருளாதார நாடுகளான இந்தியாவும், அமெரிக்காவும் ஒருங்கிணைந்து செயல்படும்போது இருதரப்புக்கும் பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் 10 லட்சம் ரூபாய் வரை திட்டச் செலவுடைய பல்வேறு சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. மாநில பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடுதல் குழுவை அமைப்பதற்கும், பதவி நீட்டிப்பு வழங்குவதற்கும் மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை, சட்டத்திற்கு புறம்பானது என்று ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

5. சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவீதமாக குறைத்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புடன் தொலைபேசி வாயிலாக உரையாடியதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு மிகப்பெரிய பொருளாதார நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படும்போது அது மக்களுக்கு பயனளிக்கும் என்றும், இருதரப்பு ஒத்துழைப்புக்கான பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் **தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்காக இந்தியாவின் 140 கோடி மக்களின் சார்பாக அந்நாட்டு அதிபர் திரு. ட்ரம்புக்கு தாம் நன்றி தெரிவிப்பதாக **கூறியுள்ளார்.**

அதிபர் ட்ரம்ப்பின் தலைமைத்துவம், உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழுமைக்கு இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதிக்கான அவரது முயற்சிக்கு இந்தியா முழு ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை மேலும் முன்னெடுத்துச் செல்ல அதிபர் திரு. ட்ரம்ப்புடன் மேலும் இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுகள் இரு நாட்டு மக்களுக்கு பயனளிக்கக் கூடியது என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், விவசாயிகள், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர், தொழில்முனைவோர் மற்றும் திறன் பணியாளர்களுக்கு இது பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவிற்கு அமெரிக்க தொழில்நுட்பம் கிடைக்கவும் இந்த பேச்சுகள் வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா-அமெரிக்கா இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் தொலைநோக்கு அடிப்படையில் வலிமையான உறுதிப்பாட்டுடன் வர்த்தக பேச்சுகள் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புக்கும் தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<<<>>>

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் 10 லட்சம் ரூபாய் வரை திட்டச் செலவுடைய பல்வேறு சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே, உற்பத்தி துறையைச் சேர்ந்த சுமார் 63 சதவீத நிறுவனங்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

சேவை துறையில் 93 சதவீத நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி 10 லட்சம் ரூபாய் வரை கடன் பெறும் திட்டங்களுக்கு எந்தவிதமான உத்தரவாதத்தையும் வங்கிகள் கேட்கக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திருமதி ஷோபா கரந்தலாஜே கூறியுள்ளார்.

<<<<>>>>

கடலூர் மாவட்டம் மருங்கூரில் தொழில் ஆய்வுகள் நிறைவடைந்து அங்கு சோழர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், தமிழக அரசின் தொல்லியல் மற்றும் அருங்காட்சியத் துறைக்கு அளித்த அனுமதியின் அடிப்படையில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த அகழாய்வில் தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியக கல்வி நிறுவன மாணவர்கள் பங்கேற்றதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மாநில பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடுதல் குழுவை நியமிப்பதற்கும், பதவி நீட்டிப்பு வழங்குவதற்கும் மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை, சட்டத்திற்கு புறம்பானது என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இப்பிரச்சினை தொடர்பான வழக்கு நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மானியக்குழு தலைவரின் பிரதிநிதி இந்த குழுவில் இடம்பெற வேண்டும் என்ற விதிமுறைக்கு மாறாக, தமிழக அரசு சில பல்கலைக்கழங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதற்கான குழுவை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினை தொட ர்பாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை துணைவேந்தர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறும் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் மருத்துவ சுற்றுலாவை ஊக்கப்படுத்தும் வகையில் **5** மருத்துவ முனையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பால் சுற்றுலா துறையைச் சேர்ந்தவர்களும் பயனடைவார்கள் என்று திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் தொழில் அதிபர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Sound Byte - 42 நொடிகள்)**

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ரஃபா எல்லை மீண்டும் திறக்கப்பட்டதால் காஸாவில் இருந்து மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர் எகிப்து சென்றடைந்தனர்.

-------------

சூதாட்டம் நடத்தி மோசடி செய்து சீன நாட்டவர்கள் 6 பேரின் உயிரிழப்புக்கு காரணமான மியான்மரை சேர்ந்த 4 பேருக்கு சீனா மரண தண்டனையை நிறைவேற்றியது.

-------------

மேற்குவங்கத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

-------------

ஜம்மு-கஷ்மீரில் நடைபெற்ற 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 83 புள்ளி இரண்டு ஏழு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

-------------

திருவாரூர் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அண்மையில் வெள்ள பாதிப்புக்கு உள்ளான கிராமங்களுக்கு ஒருவார காலத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று காப்பீட்டு நிறுவனங்களை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

-------------

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 12 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அமைச்சர் திரு. S.S. சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்.

-------------

காஞ்சிபுரத்தில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புதிய விற்பனை நிலையத்தை மாநில அமைச்சர் திரு. காந்தி திறந்து வைத்தார்.

-------------

இலங்கைக்கு கடல் வழியாக 200 கிலோ போதைப்பொருளை கடத்த முயன்ற ஒருவரை ராமநாதபுரம் பட்டினம்காத்தான் பகுதியில் காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தின் ஆழித் தேரோட்டத்திற்கு பந்தற்கால் நடும் விழா விமரிசையாக நடைபெற்றது.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே 25 ஆடுகள் உயிரிழந்தது தொடர்பாக வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

-------------

நாகர்கோவிலில் - காந்திதாம் இடையே இம்மாதம் 10ஆம் தேதி இயக்கப்படும் விரைவு ரயில் அகமதாபாத் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

இதில் தமிழ்நாடு அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

அசாமில் இப்போட்டி காலை 9 மணிக்கு தொடங்குகிறது.

மற்ற போட்டிகளில் மேற்குவங்கம் - சர்வீசஸ் அணியையும், கேரளா - அசாம் அணியையும், ரயில்வே - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

---------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் தில்லி அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

--------------

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பயிற்சி ஆட்டத்தில் இந்தியா ஏ அணி **38** ரன் வித்தியாசத்தில் அமெரிக்காவை வென்றது.

நவி மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த

இந்தியா ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **3** விக்கெட் இழப்பிற்கு **238** ரன் எடுத்தது.

**239** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய அமெரிக்கா **19** புள்ளி நான்கு ஓவரில், **200** ரன் மட்டுமே எடுத்து தோல்வி அடைந்தது.

**<<<<The End>>>>**